**பொ.து.ந.க.எண்.பி13/21957/2007**
**ஆணையாளர் அவர்களின் 03.09.2007 நாளிட்ட குறிப்பு**

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.462/2007 பொருள் எண்.1

**ஓய்வூதியம்**

திரு.மு.பாலகிருஷ்ணன், பொது பகுப்பாய்வாளர், சுகாதாரத்துறை வயது முதிர்வு ஓய்வு அடைந்தமையால் பணியிலிருந்து 31.05.2007 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். அவர் 36 வருடங்கள் 11 நாட்கள் தகுதிப்பணி புரிந்தமையால் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.10,022/–இறப்பு மற்றும் ஓய்வு கால பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3340/–ஐ தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்து பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,19,237/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்கு பின் அன்னாரது மனைவி திருமதி.அருன் பிரேமா ராணி அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,022/– 31.05.2014 முடிய 01.06.2014 முதல் ரூ.6,075/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி வகுப்பு 2ம் பிரிவு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படவேண்டும்.

ஆகையால் திரு.மு.பாலகிருஷ்ணன், பொது பகுப்பாய்வாளர், சுகாதாரத்துறை, அவர்களுக்கு 01.06.2007 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.10,022/– இறப்பு மற்றும் ஓய்வு காலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் அன்னாருக்கு பிடித்தம் செய்யவேண்டிய தொகை ரூ.57,309/– மற்றும் 25% தணிக்கைத் தடை பிடித்தம் ரூ.87,500/– பிடித்தம் செய்து மீதம் ரூ.2,05,191/– வழங்கவும் அன்னாரின் பெயரில் உள்ள தணிக்கைத்தடை நீங்கிய பின்னர் மீண்டும் ரூ.87,500/– திரும்ப வழங்கவும் மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,340/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத்தொகை ரூ.4,19,237/– மட்டும் வழங்கவும் தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.10,022/–ல் இருந்து ரூ. 6682/– ஆக குறைத்து வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.அருன் பிரேமா ராணி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,022/– 31.05.2014 முடிய ரூ.6075/– 01.06.2014 முதல் வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/1808/2007
ஆணையாளர் அவர்களின் 17.08.2007 நாளிட்ட குறிப்பு

## 27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.463/2007 பொருள் எண்.2

### பணியமைப்பு–சிறப்புநிலை வழங்க அனுமதி

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர் (திருமதி) ஆர்.சுகன்யா, மருத்துவ அலுவலர், வடபழனி மண்டலம், அவர்கள் இருபதாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு சிறப்பு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர்.(திருமதி) ஆர்.சுகன்யா, மருத்துவ அலுவலராக தற்காலிகமாக 26.05.1986 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது தற்காலிக நியமனம் அரசாணை எண்.1279, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் நாள். 25.09.91ன் படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 26.05.1988 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத் திட்டம் அவர்கள் டாக்டர் (திருமதி) ஆர்.சுகன்யா, மருத்துவ அலுவலர் 26.05.2006 முதல் சிறப்பு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை 11950+175பிபி + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளம் 10000–325–15200–ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள்/ பணிவரன்முறை செய்த நாள் | தகுதி காண்பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் |
|---|---|---|---|---|
| 01 | டாக்டர்.திருமதி ஆர்.சுகன்யா | 26.05.1986 | 26.05.1988 | – |

| இருபதாண்டு பணியை முடித்த நாள் | பிந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் | தண்டனை முற்று பெற்ற நாள் | சிறப்புநிலை ஊதியம் பெறதகுதி உடையவரா | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 25.05.2006 | – | – | ஆம் | 26.05.2006 |

டாக்டர்.(திருமதி) ஆர்.சுகன்யா, மருத்துவ அலுவலர் சிறப்பு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே டாக்டர்.(திருமதி) ஆர்.சுகன்யா, மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 25.05.2006 பிற்பகல் அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 26.05.2006 முதல் அடிப்படை சம்பளம் 11950+175+300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளமாக ரூ.10000–325–15200–ல் நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.464/2007 பொருள் எண்.3

பணியமைப்பு– ஒருவழி மாறுதல்

வேலூர் நகராட்சி ஆணையர் அவர்களின் 07.02.2006 தேதியிட்ட கடிதத்தில் வேலூர் நகராட்சி சித்தா மருந்தகத்தில் பணிபுரியும் டாக்டர்.ஜி.ஆனந்தகுமார், மருத்துவ அலுவலர், (சித்தா) அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு மாற்றம் கோரும் மனுவினை நகர்மன்றத் தீர்மானத்தின் பரிந்துரையைப் பெற்று (தீர்மானம் எண்.452/68 நாள்.18.01.2006) அவரது மாறுதல் கோரும் கடிதத்தினை அனுப்பியுள்ளார்.

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மூன்று சித்தா மருந்தகங்கள் விவரம் பின்வருமாறு.

1) கிண்டி சித்தா மருந்தகம்.
2) சூளை சித்தா மருந்தகம்.
3) இராயபுரம் சித்தா மருந்தகம்.

இதில் கிண்டி சித்தா மருந்தகத்தில் பணிபுரிந்த டாக்டர்.செல்வரங்கம், மருத்துவ அலுவலர்(சித்தா) என்பவர் 31.03.2006 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். அதே போன்று சூளை சித்தா மருந்தகத்தில் பணிபுரிந்த டாக்டர்.ஜெயசீலன் தாமஸ், மருத்துவ அலுவலர் (சித்தா) என்பவர் 30.04.2006 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். மூன்றாவது சித்தா மருந்தகமான இராயபுரம் சித்தா மருந்தகத்தில் டாக்டர்.மல்லிகா, மருத்துவ அலுவலர், (சித்தா) என்பவர் மட்டும் தற்போது பணிபுரிந்து வருகிறார்.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் கிண்டி மற்றும் சூளை சித்தா மருந்தகங்களில் சித்தா மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளது. அவ்வாறு ஏற்பட்டிருக்கும் காலிப் பணியிடங்களில் சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் கோரும் டாக்டர்.ஜி.ஆனந்த குமார், சித்தா மருத்துவ அலுவலர், வேலூர் நகராட்சி சித்தா மருந்தகம் அவர்களை ஒரு வழி மாறுதலில் சென்னை மாநகராட்சிக்கு ஈர்த்துக் கொள்வதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் சென்னை மாநகராட்சி மன்றத்தின் அனுமதி ஆணை பெறப்பட்டு அரசாணை பெறப்பட வேண்டும்.

1) தனியரது ஒரு வழி மாறுதல் தொடர்பாக ஏற்படக்கூடிய செலவினங்களை சென்னை மாநகராட்சி ஏற்காது.
2) தனியர் ஒரு வழி மாறுதலுக்கு பின்னர் தற்போது உள்ள பணி மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வு ஏதும் கோரக்கூடாது.
3) இவரது பதவிக்கான பணி மூப்புப் பட்டியலில் இளையவராக கருதப்படுவார்.
4) சிறப்பு வைப்பு நிதித் தொகை, பொது சேம நலநிதித் தொகை, மற்றும் கூட்டு காப்பீட்டு திட்டத் தொகை போன்ற கணக்குகள் முடிக்கப்பட்டு அத்தொகைகளை சென்னை மாநகராட்சி கணக்கில் சேர்க்கப்பட வேண்டும்.
5) தனியரின் தாய்மொழி தமிழ் அல்லாத பட்சத்தில் தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
6) செயல் அலுவலருக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்..
7) தனியர் மீது எவ்விதமான ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இருக்ககூடாது.

மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி மாறுதல் கோரும் டாக்டர்.ஜி.ஆனந்த குமார், வேலூர் நகராட்சி, சித்தா மருந்தகம், அவர்களை ஒரு வழி மாறுதலில் சென்னை மாநகராட்சிக்கு ஈர்த்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்15/448/2007
ஆணையாளர் அவர்களின் 30.07.2007 நாளிட்ட குறிப்பு

27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.465/2007 பொருள் எண்.4

பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

மாவட்ட குடும்ப நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்யாணி நலவாழ்வு மையத்தில், பலநோக்கு சுகாதார பணியாளராக பணிபுரியும் திருமதி.வி.சாந்தி அவர்கள் விருகம்பாக்கம்–2 நலவாழ்வு மையத்தில் பணிபுரிந்து போது 24.04.2004 முதல் 20.06.2004 வரை மருத்துவ விடுப்பு விண்ணப்பித்து அவ்விடுப்பு முடிந்த பிறகும் பணியில் சேராமல் 21.06.2004 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நலவாழ்வு மையத்தின் பணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியதற்காக இவர் மீது சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் 22.03.06 தேதியிட்ட கடிதத்தில் தனியர் தன்னை மீண்டும் பணியில் சேர்க்கும்படி கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் இணை ஆணையர் (சு) அவர்களின் 11.04.06 தேதியிட்ட உத்தரவின்படி ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி 06.05.06 அன்று மீண்டும் பணியில் சேர்ந்தார்.

இவ்வொழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக தனியரின் ஊதிய உயர்வினை மூன்று வருடங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ய 03.12.06 நாளது உத்தரவிடப்பட்டது. தனியர் தமக்கு வழங்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்ய கோரி மேல்முறையீடு மனு ஏதும் சமர்ப்பிக்கவில்லை.

இவர் பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த வேண்டும். இவர் அ.வி.18(2)ல் வரையறுக்கப்பட்டுள்ள கால கெடுவுக்கு அதிகமாக பணிக்கு வராததால் இக்காலத்தினை முறைப்படுத்த இவ்விதியை தளர்வு செய்து அரசாணை பெறப்பட வேண்டும்.

எனவே, திருமதி.வி.சாந்தி, பலநோக்கு சுகாதார பணியாளர் அவர்கள் 16.11.88 அன்று சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து 5 ஆண்டுகளுக்கு மேல் பணிநிறைவும், தகுதிகாண் பருவம் நிறைவு, செய்துள்ள நிலையில், அன்னார், 24.04.04 முதல் 20.06.04 வரை மருத்துவ விடுப்பு விண்ணப்பித்து அவ்விடுப்பு முடிந்த பிறகும் பணியில் சேராமல் 21.06.04 முதல் 05.05.06 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த அ.வி 18(2)ஐ தளர்வு செய்ய அரசின் ஆணை கோரி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.466/2007 பொருள் எண்.5

### பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திருமதி.டி.கௌரி, துப்புரவு பணியாளர், கோட்டம்–73, பகுதி–14, மண்டலம்–5அவர்கள் 10.08.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக உதவி செயற்பொறியாளர், பகுதி–14 அவர்களால் குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் பெறப்படவில்லை.

எனவே, சென்னை மாநகராட்சி, வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

குற்றச்சாட்டு:1 தாங்கள் 10.08.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

குற்றச்சாட்டு:2 மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணையை பெற்றுக்கொண்டு விளக்கம் ஏதுமளிக்காது உதாசீனப்படுத்தியுள்ளீர்.

குற்றச்சாட்டு:3 தாங்கள் துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்

மேற்கண்ட குற்றங்களுக்காக குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் பெறப்படவில்லை. உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் ஆணை நாள் 04.03.2004ன் படி திரு.பிரபாகர், உதவி செயற்பொறியாளர், கோட்டம்–67 & 68 பகுதி–13 அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டார். அதன்படி விசாரணை அலுவலர் விசாரணை செய்து கீழ்கண்டவாறு அறிக்கையளித்துள்ளார். அதன் விவரம் கீழ்வருமாறு

குற்றச்சாட்டு :1 தாங்கள் 10.08.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

தனியரின் விளக்கம் : தனது கணவர் மிகுந்த உடல் நல குறைவு காரணமாக அவதிப்பட்டு இருந்த காரணத்தினாலும், மருத்துவ செலவுக்கு கூட பணம் இல்லாமல் என்ன செய்வது என்று தெரியாமல் மிகுந்த கவலையும் கஷ்டமும் நிறைந்த நிலையில் தன்னால் தனது கணவரையும் கவனித்துக்கொண்டு அந்த கவலையில் தனக்கு உடல்நல குறைவு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட நிலையில் எனது கணவர் கடந்த 10.04.2003 அன்று காலமானார். இந்நிலையில் தான் மிகவும் பாதிக்கப்பட்டேன். எனவும், இதன் காரணத்தினால் தனக்கு வந்த குறிப்புக்கு உடனே பதில் எழுத முடியவில்லை. மேலும் தனது கணவர் இறந்த நிலையில் தான் மனநிலை பெரிதும் பாதிக்கப்பட்டு சென்னை அரசினர் மனநிலை காப்பகத்தில் புறநோயாளியாக சிகிச்சை பெற்று வந்தேன் எனவும் தான் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் குறிப்புக்கு உடனே பதில் தர இயலவில்லை. எனவே மன்னித்து வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படி பணிவுடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். என தெரிவித்துள்ளார்.

விசாரணை அலுவலர் அறிக்கை குறிப்பு: குற்றம் நிரூபணமாகிறது.

குற்றச்சாட்டு:2 மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு விளக்கமளிக்காது உதாசீனப்படுத்தியாக கருதப்படுகிறது. இதற்கு தங்கள் பதில் என்ன ?

தனியரின் விளக்கம் : தான் படிப்பு இல்லாத காரணத்தினால் தான் பெற்றுக் கொண்ட குறிப்பாணைக்கு உடனடியாக பதில் அனுப்பி வைக்க முடியவில்லை. தான் மனநிலை பாதிக்கப்பட்டதால் உடனடியாக தகவல் அனுப்ப முடியவில்லை. ஆதலால் தன்னை மன்னித்து பணியில் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டது.

விசாரணை அலுவலர் அறிக்கை: குற்றம் நிரூபணமாகிறது.

குற்றச்சாட்டு:3 தாங்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் அத்தியாவசிய பணியினை துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவிப்பதாக கருதப்படுகிறது. இதற்கு தங்கள் பதில் என்ன ?

தனியரின் விளக்கம் : தான் துப்புரவு பணியினை நன்றாக கவனிப்பேன் எந்த குற்றமும் தன் மீது பணிபுரியும் போது தெரிவித்தது கிடையாது. தனது உடல் நலக்குறைவினாலும் தனது கணவர் உடல்நலக் குறைவு ஏற்பட்டு, இறந்த காரணத்தினாலும், நான் பணிக்கு வர இயலவில்லை. தான் பணிக்கு வராத காலங்களில் தனக்கு பதில் தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்படுவதால் மாநகராட்சி பணிக்கு குந்தகம் ஏதும் ஏற்படவில்லையென்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டது.

<u>ம.அ.5.ந.க. எண்.சி2/ 7551/2002</u>

<u>விசாரணை அலுவலர் அறிக்கை:</u> குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

மேற்கண்ட விசாரணை அலவலர் அறிக்கையை தனியருக்கு சார்வு செய்து கூடுதல் விளக்கம் கோரப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட தனியர் விசாரணையின் போது கூறிய விளக்கத்தினையே தெரிவித்துள்ளார். பணியாளர் அளித்த விளக்கத்தின் பேரில் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி பணியாளர் 31.10.2003 முதல் மீண்டும் பணியில் சேர்ந்து பணிபுரிகிறார்.

எனவே, தனியர் 10.08.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக பணியாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அதற்கு பணியாளரின் விளக்கம் விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் தனியரின் கூடுதல் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. விசாரணை அலுவலர் அறிக்கை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையானவை, அவை கடுமையான தண்டனைக்குரியவை எனினும் நிகழ்வு கருணையுடன் அணுகப்பட்டதில் அன்னாரின் ஊதிய உயர்வினை மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து ஆணை வழங்கப்பட்டது. மீண்டும் தனியர் 12.05.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் பெறப்பட்டது. பணியாளர் 30.09.2004 நாளிட்ட தனது விளக்கத்தில் அவருக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் 12.05.2004 முதல் பணிக்கு வரவில்லை என்றும் தற்பொழுது அவருக்கு உடல்நலம் சரியாகிவிட்டது என்றும் தன்னை இம்முறை மன்னித்து மீண்டும் பணி வழங்கிடவும் இனி வருங்காலங்களில் இது போல் நடவாமல் பார்த்து கொள்கிறேன் எனவும், கூறியுள்ளார். பணியாளர் அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை.

எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(1)ன் கீழ் கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் வழங்கி விளக்கம் கேட்கப்பட்டது.

<u>குற்றச்சாட்டு:1</u> தாங்கள் 12.05.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

<u>குற்றச்சாட்டு:2</u> மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு காலதாமதமாக விளக்கமளித்துள்ளீர்.

<u>குற்றச்சாட்டு:3</u> தாங்கள் துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக்கொண்ட பணியாளர் தனது 12.10.2004 நாளிட்ட விளக்கத்தில் கீழ்கண்ட விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு:1க்கு விளக்கம்</u> ஐயா தான் படிப்பறிவு இல்லாத காரணத்தால் விடுப்பு எடுக்கும் முன்பு முன் அனுமதி பெற வேண்டும் என்று தான் அறியவில்லை. எதிர்பாராமல் திடீர் என்று தனக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால் இந்த தவறு நேர்ந்தது தன்னை இக்குற்றத்திற்கு மன்னிக்கவும்.

<u>குற்றச்சாட்டு:2க்கு விளக்கம்</u> மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணை காலதாமதமாக தான் கிடைத்தது அதனை பெற்றவுடன் விளக்கத்தினை உடன் சமர்ப்பித்துள்ளேன்.

<u>குற்றச்சாட்டு:3க்கு விளக்கம்</u> தான் பணிக்கு வராததால் துப்புரவு பணி பாதிக்கும் என்று எனக்கு தெரியாது. இனிவரும் காலங்களில் இது மாதிரி நடந்துக்கொள்ளாமல் பார்த்துக் கொள்கிறேன்.

ஆணையாளர் மற்றும் துணை ஆணையர் (பணிகள்) பொறுப்பு அவர்களின் ஆணையின்படி அன்னாரை ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில்சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி பணியாளர் 19.07.2005 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, தனியர் 12.05.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக ஊதிய உயர்வினை மூன்று மாதங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும் பணிக்கு வராத காலமான 12.05.2004 முதல் 18.07.2005 வரை தகுதியுடைய விடுப்பாக பணிவரன்முறை செய்தும் ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திருமதி.டி.கௌரி, துப்புரவு பணியாளர், கோட்டம்–73, பகுதி–14, என்பவர் இரு நிகழ்வுகளில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலங்களான 10.08.2002 முதல் 30.10.2003 வரை மற்றும் 12.05.2004 முதல் 18.07.2005வரை பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(1) மற்றும் 18(2)ஐத் தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.1/ந.க.எண்.அ6 / 917 / 2005

ஆணையாளர் அவர்களின் 17.08.2007 நாளிட்ட குறிப்பு

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.467/2007 பொருள் எண்.6

**பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திருமதி. விஜயலட்சுமி, துப்புரவு பணியாளர், வார்டு–2, பகுதி–1, மண்டலம்–1, என்பவர் கடந்த 11.2.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. விளக்கம் கோரி குறிப்பாணை பதிவு அஞ்சல் மூலம் 1.04.2002 அன்று அனுப்பப்பட்டு தனியர் விளக்கம் அளிக்காததால் சென்னை மாநகராட்சி 3 & 4 ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) துணை விதி எண். 9(1)ன் கீழ் குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டது. 12.7.2002 அன்று பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

இக்குற்றக் குறிப்பாணைக்கும் தனியர் விளக்கம் அளிக்காததால், 9 (1)ன் கீழ் வழங்கப்பட்ட குற்றசாட்டு குறிப்பாணை விலக்கப்பட்டு 9 (2) ன் கீழ் கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டது.

1. கடந்த 11.2.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை
2. பணிக்கு வராமை குறித்து இதுநாள் வரை எவ்வித தகவலும் அளிக்காதது பணியின் மீது அக்கறையின்மையை காட்டுகிறது.
3. ஏற்கனவே முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமையால் கோட்ட துப்புரவு பணிகள் வெகுவாக பாதிக்கப்படுகிறது.
4. அடிக்கடி முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமையால் கோட்ட துப்புரவு பணிகள் வெகுவாக பாதிக்கப்படுகிறது.
5. இதுநாள் வரை எவ்வித விளக்கமும் அளிக்காதது மேலதிகாரிகளின் உத்தரவிற்கு கீழ்படியாமையை காட்டுகிறது.

திருமதி. விஜயலட்சுமி ,பணிப்பதிவேட்டில் குறிப்பிட்ட விலாசத்தில் இல்லாததால் இக்குற்றக் குறிப்பாணையை அன்னாருக்கு சார்வு செய்ய இயலாததால், அன்னாரது விலாசத்திற்கு பதிவு அஞ்சலில் 19.07.2003 அன்று சார்வு செய்யப்பட்டது. தனியரிடம் இருந்து எவ்வித விளக்கமும் பெறப்படாததால், இந்நிகழ்வு தொடர்பான விசாரணை அலுவலராக திரு. என். ராமலிங்கம், உதவி வருவாய் அலுவலர்–1 அவர்கள் (பொ.து.ந.க.எண்.இ3/31544/01, 16.07.2003 நாளிட்ட ஆணையரின் செயல் முறை ஆணை) நியமிக்கப்பட்டார்.

பணியாளர் 3 நினைவூட்டல்களுக்கு பின் 29.10.2003 அன்று நேர்முக விசாரணைக்கு ஆஜராகி பின்வருமாறு விளக்கம் அளித்துள்ளார்.

குற்றச்சாட்டு – 1க்கு : தனது உடல் நிலை சரியில்லாததால் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை தவறு தான் எனவும் மன்னிக்கும்படியும்.

குற்றச்சாட்டு –2க்கு : அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க யாரும் இல்லை. புதிய அத்திப்பட்டில் தன் உறவினர் வீட்டில் இருந்து உடல் நிலை சரியில்லாமல் மருந்து மாத்திரை சாப்பிட்டு வந்ததாகவும், அதனால் தகவல் தெரிவிக்க இயலவில்லை எனவும், பணியின்மீது அக்கறை உள்ளது எனவும் குற்றத்தை ஒப்புக் கொள்வதாகவும்,

குற்றச்சாட்டு –3க்கு : தன் உடல்நிலை சரியில்லாமல் அரச ஸ்டான்லி மருத்துவமனையின் புற நோயளியாக சென்று மருந்து மாத்திரை சாப்பிட்டு வந்தேன் எனவும், மேலும் தனக்கு அதிகமாக கால்வலி மற்றும் இரத்த அழுத்தம் உள்ளதாகவும்,

குற்றச்சாட்டு –4க்கு : கோட்ட துப்புரவு பணிகள் பாதித்தமைக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும், மேலதிகாரிகளின் உத்தரவின்படி படியே பணிபுரிந்து வந்ததாகவும், தன் உடல் நலக்குறைவால் தான், இது போன்ற தவறு நேர்ந்துவிட்டது. இம்முறை மன்னித்து குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொண்டு தன்னை பணிக்கு எடுத்துக் கொள்ள கோரியுள்ளார்.

விசாரணை அலுவலரின் 29.12.2003 நாளிட்ட அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபணமானதாக தெரிவித்துள்ளார்.

விசாரணை அறிக்கை தனியருக்கு சார்வு செய்யப்பட்ட விளக்கம் பெறப்பட்டது. இதற்கிடையில், தனியர் 8.1.2004 நாளிட்ட கடிதத்தில், உடல்நிலை சரியில்லாமல் தன் இரு கால்களும் நடக்க முடியாமல் போனதாலும், தன் 23 வயது மகன் காணாமல் போன மன உளைச்சலாலும், 11.2.2002 முதல் பணிக்கு வரவில்லை எனவும், தன்னை மன்னித்து மீண்டும் பணிக்கு அனுமதிக்க கோரியதன் பேரில் 28.3.2004 முதல் மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டார்.

தனியர் விசாரணை அறிக்கைக்கு 5.3.2004 நாளிட்ட கூடுதல் விளக்க கடிதத்தில், உடல்நிலை சரியில்லாத காரணத்தால் 11.2.2002 முதல் பணிக்கு வரவில்லை எனவும், உறவினர் வீட்டில் தங்கி மருந்து சாப்பிட்ட காரணத்தால் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க இயலவில்லை எனவும், தன்னால் கோட்ட பணிகள் பாதித்ததற்கு மன்னித்து மீண்டும் பணிக்கு அனுமதிக்க கோரியுள்ளார்.

தனியர் மீது தொடரப்பட்ட இவ்வொழுங்கு நடவடிக்கையில், தனியரது விளக்கம், விசாரணை அலுவலர் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணமாவதாக தெரிவித்ததன் அடிப்படையிலும், தனியரது கூடுதல் விளக்கம் யாவும் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தனியர் 11.02.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்கு தண்டனையாக 3 வருட ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ய ஆணையிடப்பட்டது. பணிக்கு வராத காலமான 11.2.2002 முதல் 27.3.2004 வரை ஓராண்டு கடந்துள்ளதால் அரசின் தளர்வாணை பெற்று வரன்முறைப்படுத்தப்படும் என ஆணையாளர் அவர்களின் 6.11.2004 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு தொடர்பாக அரசாணை பெற முற்பட்ட தருணத்தில் தனியர் 4.1.2005 முதல் மீண்டும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்கு ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது.

திருமதி. விஜயலட்சுமி, நிரந்தர துப்புரவு பணியாளர், வார்டு–2, பகுதி –1, மண்டலம் –1 என்பவர் கடந்த 04.01.2005 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து குறிப்பாணை மூலம் விளக்கம் அளிக்க கோரி வழங்கப்பட்டது. தனியர் 7.02.2005 அன்று குறிப்பாணையை பெற்றுக் கொண்டு விளக்கம் அளிக்காததால், அன்னார் மீது சென்னை மாநகராட்சி 3 (ம) 4 ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) துணை விதி எண். 9(1)ன் கீழ் குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டது. தனியருக்கு இக்குற்றக் குறிப்பாணை பதிவு அஞ்சலில் சார்வு செய்ய அனுப்பப்பட்டு, தனியர் விலாசத்தில் இல்லாததால், திரும்ப பெறப்பட்டுள்ளது நேரில் சார்வு செய்ய 2 துப்புரவு மேஸ்திரிகள் சென்ற போது தனியர் இவ்விலாசத்தில் இல்லை என தெரிவித்தாக துப்புரவு ஆய்வாளர், வார்டு –2 அவர்களின் 26.05.2005 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் 04.01.2005 முதல் 6 மாதத்தினை கடந்து விட்டதால், 9(1) ல் வழங்கிய குற்றக் குறிப்பாணை விலக்கப்பட்டு, 9 (2)ன் கீழ் கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

1) கடந்த 4.1.2005 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை
2) முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் கோட்ட துப்புரவு பணிகள் பாதிப்பு ஏற்படுத்துதல்

மேற்கண்ட குற்றக் குறிப்பாணையை தனியர் 19.10.2005 நாளிட்டு பெற்றுக் கொண்டு எவ்வித விளக்கமோ, பணிக்கு வர முயற்சியோ மேற்கொள்ளவில்லை எனவே, இந்நிகழ்வு தொடர்பாக திரு. ஜென்நாதன் (ஒய்வு) தொழிலாளர் நல அலுவலர் அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையில் தனியர் 06.04.2006 நாளிட்ட விளக்கத்தில் தனக்கு இரண்டு கால்களும், நடக்க முடியாததாலும், வெளியூர் சென்று நாட்டு மருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்ததால் தன்னால் பணிக்கு வர முடியாமல் இருந்ததாகவும், அதனால் விடுப்புக்கான காரணத்தை தன்னால் தெரிவிக்க இயலவில்லை எனவும், தற்போது கால்கள் குணமாகிவிட்டதால், மீண்டும் பணிக்கு அனுமதிக்கும்படி கோரியதன் அடிப்படையில் (பொ.து.ந.க.எண் இ3/31544/2001 நாள் 17.11.2005 நாளிட்ட ஆணையரின் அதிகார பகிர்ந்தளிப்பு செயல்முறை ஆணைப்படி) தனியரை மீண்டும் பணிக்கு அனுமதித்து மண்டல அலுவலர் –1 அவர்களின் 25.5.2006 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. 13.06.2006 முதல் தனியர் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

தனியர் விசாரணைக்கு, நேரில் ஆஜராகி பின்வருமாறு விளக்க மளித்துள்ளார்.

தனக்கு ஸ்கூட்டர் மூலம் விபத்து ஏற்பட்டது என்றும் அதனால் நடக்க முடியாமல் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வந்ததாலும், தன் குடும்பத்தில் சில முக்கிய பிரச்சினைகள் காரணமாக வெளியூர் சென்று விட்டதாலும், பணிக்கு வர இயலவில்லை என்றும் தற்போது சீராக பணிக்கு வருவதாகவும், தெரிவித்து இனி இவ்வாறு குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாகவும், மன்னிப்பு கோருவதாகவும் தெரிவித்துள்ளார்.

விசாரணை அலுவலர் 23.08.2006 நாளிட்ட அறிக்கையில், குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றச் சாட்டுகளை ஒப்புக் கொண்டதன் அடிப்படையிலும், நிர்வாகத்தரப்பில் அளித்த, ஆவணங்களின் அடிப்படையிலும், குற்றம் சாட்டப்பட்டவர் 04.01.2005 முதல் பணிக்கு ஆஜராகவில்லை என்பது தெளிவாகிறது ஆகவே, நிர்வாகம் அவர் மீது சுமத்தியுள்ள மேற்கண்ட குற்றச்சாட்டுகள் இனங்கள் 1 மற்றும் 2 ஆகியவை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

தனியருக்கு விசாரணை அறிக்கையின் நகல் சார்வு செய்யப்பட்டு பெறப்பட்ட 13.09.2006 நாளிட்ட விளக்க கடிதத்தில் தனியர் குற்றச்சாட்டுகளுக்கு அளித்த விளக்கத்தினை தவிர கூடுதல் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.

தனியர் மீது தொடரப்பட்ட இவ்வொழுக்கு நடவடிக்கையில், தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தனியரின் விளக்கம் மற்றும் விசாரணை அலுவலர் தனியர் மீதான குற்றச் சாட்டுகள் யாவும் நிரூபணமானதாக தெரிவித்தன் அடிப்படையில், கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தனியர் செய்துள்ள குற்றம் கடுமையான தண்டனைக்குரியது இருப்பினும், இந்நிகழ்வு கருணையுடன் அணுகப்பட்டதில், இறுதி முடிவாக தனியரின் ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 04.01.2005 முதல் 12.06.2006 வரை ஓராண்டினைக் கடந்துள்ளதால் அடிப்படை விதி 18 (2) ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன் மொழிவு அனுப்பி அரசாணை பெற்று வரன் முறைப்படுத்தவும் 12.4.2007 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

முதல் நிகழ்வு முடிந்த 2 மாதங்களுக்குள் தனியர் மீண்டும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் இக்கோப்பின் மீது நடவடிக்கை தாமதமானது.

எனவே, திருமதி. விஜயலட்சுமி, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத இரு நிகழ்வுகளும், ஓராண்டினைக் கடந்துள்ளதால், 11.2.2002 முதல் 27.3.2004 வரை மற்றும் 4.1.2005 முதல் 12.6.2006 வரை அடிப்படை விதி 18(2) ஐ தளர்வு செய்து அரசாணை பெற்று சம்பளமில்லா விடுப்பாக வரன் முறைபடுத்துவது குறித்து அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்ப, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.468/2007 பொருள் எண்.7

பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திரு.ரோசைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–69, பகுதி–14, மண்டலம்–5, அவர்கள் 16.01.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக உதவி செயற்பொறியாளர்/ பகுதி–14 அவர்களால் குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனைப் பெற்றுக் கொண்ட பணியாளர் தனது 21.07.2003 நாளிட்ட விளக்கக் கடிதத்தில் அவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரது சொந்த ஊருக்குச் சென்று வைத்தியம் பார்த்ததாகவும் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு உள்ளது என்று மருத்துவர் கூறியதால் அங்கு தங்கி நாட்டு மருந்து சாப்பிட்டு வந்ததாகவும் அவரால் 16.01.2002 முதல் பணிக்கு வராமல் போனதாகவும், அவருக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தால் அவரால் விடுப்பு கடிதம் ஏதும் சமர்ப்பிக்கவில்லையெனவும், அவரை மன்னித்து மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளுமாறும், வருங்காலங்களில் இது போன்ற தவறுகளை செய்ய மாட்டேன் என்றும் கூறியுள்ளார் விளக்கம் ஏற்புடையதாக இல்லை.

எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றங்கள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

குற்றச்சாட்டு:1 தாங்கள் 16.01.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

குற்றச்சாட்டு:2 உதவி செயற் பொறியாளர், பகுதி–14, அவர்கள் அளித்த குறிப்பாணைக்கு காலதாமதமாக விளக்கமளித்துள்ளீர்.

குற்றச்சாட்டு:3 துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்

மேற்கண்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணையை பெற்றுக் கொண்ட பணியாளர் தனது 26.08.2007 நாளிட்ட விளக்கக் கடிதத்தில் கீழ்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்.

குற்றச்சாட்டு 1–க்கு விளக்கம் 16.01.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததற்கு தனக்கு மஞ்சள் காமாலை நோய் பாதிக்கப்பட்டதால் பணிக்கு வரத இயலவில்லை அலுவலகத்திற்கு குந்தகம் விளைவிக்கும் எண்ணம் இல்லை.

குற்றச்சாட்டு 2–க்கு விளக்கம் உதவி செயற்பொறியாளர், கொடுத்த குறிப்பாணைக்கு விளக்கம் அளிக்க காலதாமதம் ஏற்பட்டதற்கு தனக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டது தான் காரணம் ஆகவே, குறிப்பாணைக்கு பதில் வழங்க காலதாமதமாகிவிட்டது.

குற்றச்சாட்டு 3–க்கு விளக்கம் துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவிக்கும் எண்ணம் தனக்கு கிடையாது உடல்நலம் சரியில்லாத காரணத்தால் மேற்படி குற்றத்திலிருந்து தன்னை விடுவிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். என்றும் மேலும், எல்லா குற்றத்திலிருந்தும் தன்னை விடுவித்து பணியில் அமர்த்தக் கோரியுள்ளார்.

தனியரின் கோரிக்கையின்படி தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டது. அதன்படி பணியாளர் 07.12.2005 முதல் பணியில் சேர்ந்தார். ஒழுங்கு நடவடிக்கையின் அடுத்த கட்ட நடவடிக்கையாக பணியாளரை விசாரணை செய்த விசாரணை அலுவலர் தனது 24.10.2005 நாளிட்ட அறிக்கையில் மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என அறிக்கையளித்துள்ளார்.

விசாரணை அலுவலர் அறிக்கையின் மீது கூடுதல் விளக்கம் கோரி குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனைப் பெற்ற பணியாளர் தனது08.02.2006 நாளிட்ட விளக்கக் கடிதத்தில் அவருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டதால் 16.01.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல், குற்றச்சாட்டுக் குறிப்பாணைக்கு விளக்கம் அளித்து அதன் மீது விசாரணை மேற்கொண்ட போது விசாரணை அலுவலர் அவர்களிடத்தில் அவருக்கு மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டதால் நாட்டு மருந்து சாப்பிட அவரது சொந்த ஊருக்குச் சென்று விட்டதாக தெரிவித்ததாகவும் அவரது உடல்நிலை மிகவும்

<u>ம.அ.5.ந.க. எண்.சி2/ 5002/2003</u>

பாதிக்கப்பட்டதால் அவர் ஊருக்கு சென்றதாகவும், அவருக்கு வழங்கப்பட்ட குறிப்பாணையை அவரது ஊருக்கு அனுப்பி வைத்ததாகவும், அதனைப் பெற்றுக்கொண்டு அவரது விளக்கத்தினை சமர்ப்பிக்க காலதாமதம் ஏற்பட்டதாகவும், அவரது உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு சுயநினைவின்றி இருந்ததால் குறித்த நேரத்தில் விளக்கமளிக்க காலதாமதம் ஏற்பட்டதாகவும், தன்னை மன்னித்து தன் மீது கொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்குமாறும் கோரியுள்ளார்.

குற்றம்சாட்டப்பட்டுள்ள பணியாளர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு, அதற்கு தனியரின் விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் தனியரின் கூடுதல் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாகவும் சுயமாகவும், பரிசீலிக்கப்பட்டன, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றம் கடும் தண்டனை பெறுவதற்குரியவை. எனினும் நிகழ்வு கருணையுடன் அணுகப்பட்டும் தனியரின் குடும்ப சூழ்நிலை கருத்தில் கொண்டும் மற்றும் தனியர் ஒரு 4ஆம் நிலை ஊழியர் என்பதாலும் திரு.ரோசைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–69, பகுதி–14, மண்டலம்–5 அவர்கள் 16.01.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணையாக அன்னாரின் ஊதிய உயர்வினை மூன்று ஆண்டிற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், பணியாளர் பணிக்கு வராத காலமான 16.01.2002 முதல் 06.12.2005 வரையிலான காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய பணி வரன்முறை செய்யப்படும் என ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திரு.ரோசைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–69,பகுதி–14, மண்டலம்–5 அவர்கள் 16.01.2002 முதல் 06.12.2005 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.469/2007 பொருள் எண்.8

**பணியமைப்பு– பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திருமதி.ஏ.மல்லிகா, பூங்கா பணியாளர், பகுதி–13, மண்டலம்–5 அவர்கள் 01.04.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்றக்கொண்டு தனியர் தனது 06.09.2004 நாளிட்ட கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லை என்று அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை.

எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றங்கள் சுமத்தி குறிப்பாணை வழங்கி விளக்கம் கேட்கப்பட்டது.

| | |
|---|---|
| குற்றச்சாட்டு–1 | தாங்கள் 01.04.2004 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும். |
| குற்றச்சாட்டு–2 | மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு காலதாமதமாக விளக்கமளித்துள்ளீர். |
| குற்றச்சாட்டு–3 | பூங்கா பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர். |

மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கான குறிப்பாணையை பெற்ற பணியாளர் தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு சமர்பித்துள்ளார்.

**குற்றச்சாட்டு–1க்கு விளக்கம்:** தனது உடல் நலக்குறைவு காரணமாய் தான் மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வந்ததாகவும், அலுவலகத்திலிருந்து மிகுந்த தூரம் என்பதால் தான் மருத்துவச்சான்று கொடுக்க இயலவில்லை. மேலும் தனக்கு உதவி செய்ய ஆள் இல்லாத காரணத்தினால் தனக்கு ஏற்பட்ட கடுமையான நோய் காரணமாய் தான் பணிக்கு வர முடியவில்லை என்றும் தான் இனிமேல் இவ்வாறு நடந்து கொள்ளமாட்டேன். தன்னை மன்னித்துவிடும்படி பணிவுடன் கேட்டுக்கொள்வதாகவும்,

**குற்றச்சாட்டு –2க்கு விளக்கம்:** தனது உடல் நலக்குறைவு காரணமாய் தான் படுத்தபடுக்கையாக இருந்ததாலும் தன்னால் நடமாடக்கூட முடியாததாலும் தன் உடல்நலம் பாதிக்கப்பட்டதாலும், தன்னால் பதில் வழங்க தாமதம் ஆகிவிட்டது. என்றும் இனிவரும் காலங்களில் தான் இவ்வாறு நடந்து கொள்ளமாட்டேன் என்றும் இந்த முறை தன்னை மன்னித்து விடும்படியும்,

**குற்றச்சாட்டு –3க்கு விளக்கம்:** தான் பணிக்கு சேர்ந்த நாள் முதல் எந்த ஒரு குறைபாடும் இல்லாமல் நல்லமுறையில் பணியாற்றியுள்ளேன் எனவும், தனக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணத்தினால் தான் பணிக்கு வர முடியவில்லை என்றும் தன்னால் பூங்கா பணிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் பணிவுடன் தெரிவித்து, தன்னை மன்னித்து, மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுவிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

பணியாளர் மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு தனியரை விசாரணை செய்து பெறப்பட்ட விசாரணை அலுவலர் 14.07.2005 நாளிட்ட அறிக்கையில் தனியர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாடுகள் அனைத்தும் நிரூபணமாகிறது. என தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கையினை தனியருக்கு சார்வு செய்து விசாரணை அறிக்கை மீதான கூடுதல் விளக்கத்தில், குற்றச்சாட்டுகளுக்கு அளித்த விளக்கத்தினை தவிர கூடுதல் விளக்கம் ஏதும் அளிக்க வில்லை.

தனியரின் கோரிக்கையின் பேரிலும், ஆணையர் அவர்களின் 30.09.2005 நாளிட்ட ஆணையின்படியும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி பணியாளர் 21.10.2005 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

தனியர் மீதான குற்றச்சாட்டுகள், தனியரின் விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை, தனியரின் கூடுதல் விளக்கம், ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

<u>ம.அ5.ந.க.எண்.சி2/7372/2004</u>

திருமதி.ஏ.மல்லிகா, பூங்கா பணியாளர், பகுதி–13, மண்டலம்–5 அவர்கள் 01.04.2004 முதல் பணிக்கு வராதது கடுமையானது மற்றும் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக கருதப்பட்டாலும் இந்நிகழ்வினை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு அக்குற்றத்திற்காக அன்னாரின் ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், பணிக்கு வராத காலம் 01.04.2004 முதல் 20.10.2005 வரையிலான காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசாணை பெற்றபின் மேற்படி பணிக்கு வராத காலத்தினை வரன்முறைப்படுத்தப்படும் எனவும், ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திருமதி.ஏ.மல்லிகா, பூங்கா பணியாளர், பகுதி–13, மண்டலம்–5 அவர்கள் 01.04.2004 முதல் 20.10.2005 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசின் ஆணை பெற அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்ப நியமனக்குழுவின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.9.ந.க. எண்.அ.6/ 3451/2002**

**ஆணையாளர் அவர்களின் 08.09.2007 நாளிட்ட குறிப்பு**

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.470/2007 பொருள் எண்.9

**பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்தல்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9ல் பணியமைப்புப்பிரிவு வகுப்பு நான்கினைச் சார்ந்த துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திருமதி கே.நாராயணி, அவர்கள் கடந்த 30.6.2003 அன்று காலமானார். தனியரின் வாரிசுதாரரும் கணவருமான திரு.கே.ஆனந்தன், அவர்கள் சமர்ப்பித்த இறப்புச் சான்றிதழ் படி பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யப்பட்டு வாரிசு தாரருக்கு கூட்டுக் காப்பீட்டுதிட்டத் தொகை மட்டும் பெற்று வழங்கப்பட்டுள்ளத. திருமதி கே.நாராயணி 30.6.2003 அன்று காலமான துப்புரவு பணியாளர்ரின் வாரிசுதாரர்க்கு குடும்ப ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்கிட, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் சான்று பெற நடவடிக்கை மேற்கொண்டதில் துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் 17.5.2005 நாளிட்ட அறிக்கையில் தனியர் 6.1.1998ல் பணியில் சேர்ந்துள்ளதால் அடிப்படை விதி 18(1)ன்டி ஐந்து வருடங்களுக்கும் குறைவாக பணிபுரிந்த பணியாளர் அதிகபட்சமாக ஆறுமாதங்கள் தொடர்ச்சியாக எந்தவகையான விடுப்பும் துய்க்க அனுமதிக்கப்படலாம் எனவும், மறைந்த பணியாளர் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கும்மேல் 4.2.99 முதல் 15.8.99 வரை மற்றும் பிப்ரவரி 2002 முதல் காலமான 30.6.2003 வரையிலும் பணிக்கு வராமல் அடிப்படை விதி 18(1)ஐ மீறிய செயல்களுக்கு அன்னாரின் பொருட்டு அடிப்படை விதி 18(1)ஐ தளர்வு செய்து அரசாணை பெற்று தணிக்கைச் சான்றுக்கு அனுப்பிடக் கோரப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு சமர்ப்பித்துக் கொள்வது திருமதி கே.நாராயணி அவர்கள் துப்புரவு பணியாளராக நியமிக்கப்பட்டு 6.1.1998 முதல் கோட்டம்–141, பகுதி–27ல் பணிபுரிந்து 17.8.2000 அன்று முதல் பகுதி–25, கோட்டம்–131க்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டு கோட்டம்–131ல் பணிபுரிந்து 30.6.2003 அன்று காலமானார்.

இத்தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் இவர் கோட்டம்–141, பகுதி–27ல் பணிபுரிந்த போது 4.2.99 முதல் 15.8.99 வரை பணிக்கு வராமல் பணிப்பதிவேட்டில் ஊதியமில்லா விடுப்பாக பதியப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்குவராத காலம் ஆறு மாதங்களுக்கு மிகைப்படுவதால் அரசின் தளர்வாணை பெறவேண்டி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், உதவி செயற் பொறியாளர், பகுதி–27 அவர்களின் 30.1.2006 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது 4.2.99 முதல் 15.8.99 வரை கோட்டம்–141, பகுதி–27ல் பணியாற்றியபோது பணிக்கு வராத காலத்திற்கு எவ்வித பரிந்துரைகளும் கோட்ட அலுவலகத்தால் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வமயம் சம்மந்தப்பட்ட 141வது கோட்டத்தில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்த திரு.பி.குமாரவேலு அவர்கள் செப்டம்பர் 2004ல் தன்விருப்ப ஓய்வு பெற்றுள்ளார் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், தனியர் 16.3.2001 முதல் 11.10.2001 வரை ஆறு மாதகாலத்திற்கும் மேலாக பணிக்கு வராத காரணத்திற்காக அன்னார் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இறுதி முடிவாக தனியரை எச்சரிக்கை செய்தும், பணிக்கு வராத ஆறுமாதத்திற்கும் மிகைப்பட்டட காலம் சம்பளமில்லா விடுப்பாக வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியரின் பணிப்பதிவேடு பக்கம்–15ல் ஒட்டப்பட்டுளள உதவி ஆணையர் மண்டலம்–9 அவர்களின் செயல்முறை ஆணை ம.அ.9.ந.க.எண்.அ5/6633/2000, நாள் 3.10.2001 மற்றும் பதிவுகள் வாயிலாக தெளிவாகிறது. இந்நிகழ்வு தொடர்பான ஒழுங்கு நடவடிக்கை கோப்பு பகுதி–25 அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வந்ததில் பகுதி–25 அலுவலகம் பல்வேறு கட்டங்களில் மராமத்து பணி மேற்கொள்ள இடமாற்றம் செய்த போது மற்ற கோப்புகளுடன் கலந்துவிட்டதாகவும் தீவிரமாக தேடியும் இதுநாள்வரை கிடைக்கப்பெறவில்லை என உதவி செயற் பொறியாளர் / பகுதி–25 அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>ம.அ.9.ந.க. எண்.அ.6/ 3451/2002</u>

மேற்கண்ட நிகழ்வினை தொடர்ந்து தனியர் 26.1.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத செயலுக்கு கறிப்பாணை வாயிலாக உரிய விளக்கம் சமாப்பிக்கக் கோரியும் தனியர் விளக்கம் சமர்ப்பிக்காததால் அன்னார்மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் பின்வரும் நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

1. 26.1.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.
2. முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் குறிப்பாணை அனுப்பப்பட்டு விளக்கம் கேட்டதற்கு இதுநாள்வரை விளக்கம் அனுப்பிவைக்கப்படவில்லை.
3. விடுப்பு கடிதமோ, முன் அனுமதியோ பெறவில்லை.
4. துப்புரவு பணியில் பாதிப்பு ஏற்பட காரணமாக இருந்தது.

மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கு தனியருக்கு போதுமான கால அவகாசம் வழங்கியும் விளக்கம் சமாப்பிக்காததால் உள் விசாரணை நடவடிக்கை மேற்கொள்ள விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்ட நிலையில் பணியாளர் 30.6.2003 அன்று காலமானதைத் தொடர்ந்து இணை ஆணையர்(பணிகள்) அவர்களால் தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கையை கைவிடவும் தனியர் பணிக்கு வராத காலங்கள் தகுதியுள்ள விடுப்பாக பாவிக்கவும் இறுதி முடிவு செய்யப்பட்டு, தனியர் காலமாகிவிட்டதால் ஆணையர் அவர்களின் 14.12.2006நாளிட்ட செயல்முறை ஆணை தனியரின் கணவரிடம் சார்வு செய்யப்பட்டது. தனியரின் மரணம் இயற்கையானது தான் அசாதாரணமானதல்ல என்று அவரது கணவர் திரு.கே.ஆனந்தன் அவர்கள் 26.08.2005 நாளிட்ட கடிதத்தில் உறுதி அளித்துள்ளார்.

எனவே, 30.06.2003ல் காலமான திருமதி.கே.நாராயணி, துப்புரவு பணியாளர், கோட்டம்–131, பகுதி–25, மண்டலம்–9 என்பவர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தில்,

1) முதல் நிகழ்வில் 04.02.1999 முதல் 15.08.1999 வரை வராத காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளாததால் அடிப்படை விதி 18(1) மற்றும் இத் தனியர் பணிக்கு வராதது குறித்து எவ்வித ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் அடிப்படை விதி 18(3)ஐ தளர்த்த அரசின் தளர்வாணையும் மற்றும்

2) இரண்டாவது நிகழ்வில் 16.03.2001 முதல் 11.10.2001வரை பணிக்கு வராத காலத்திற்கு ஒழுங்கு நடவடிக்கை 9(1)ன் கீழ் எடுக்கப்பட்டு, இறுதி ஆணை வழங்கப்பட்டதில் பணிக்கு வராத காலத்தை “ சம்பளமில்லா விடுப்பாக “ வரன்முறைப்படுத்தப்பட்டதற்கு அரசின் தளர்வாணை வேண்டியும்,

3) மூன்றாவது நிகழ்வில் 26.01.2002 முதல் இறப்பு நிகழ்ந்த 30.06.2003 வரை பணிக்கு வராத காலத்திற்கு ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை முடிவுறாத நிலையில், தனியர் 30.06.2003 காலமானதால் இணை ஆணையர் (பணிகள்) அவர்களது 02.12.2003 நாளிட்ட உத்திரவில் ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டும், பணிக்கு வராத காலத்தை விதிகளின்படி வரன்முறைப்படுத்தப்படும் என தெரிவித்து, 14.12.2006 நாளிட்ட ஆணையரது செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. இக்காலத்தை வரன்முறைப்படுத்த அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.471/2007 பொருள் எண்.10

**பணியமைப்பு – துறைத்தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அனுமதி**

டாக்டர்.திரு.கு.சண்முகம் அவர்கள் மருத்துவ அலுவலராக மண்டலம்–7ல் பணியாற்றி 31.12.2006 வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளார். அன்னாருக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்கும் பொருட்டு கோப்பு தணிக்கைக்கு அனுப்பியதில் துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களின் 20.06.2007 நாளிட்ட கடிதத்தில் தனியருக்கு ஓய்வூதியப் பயன்கள் அனுமதிக்குமுன் செயல் அலுவலருக்கான கணக்குத் தேர்வு மற்றும் மருத்துவ விதி தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறாததற்கு பிழைப்பாணை பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில் டாக்டர். திரு.கு.சண்முகம், மருத்துவ அலுவலராக ஆணையாளரின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/19070/84, நாள்.26.02.1986ல் பணி நியமனம் செய்யப்பட்டு 09.04.1986ல் பொறுப்பேற்றுள்ளார். சென்னை மாநகராட்சி பொது மருத்துவ பணி விதிகள் 1969ன் படி இவருக்கு மருத்துவ தொகுப்பு தேர்வு பொருந்தாது, செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணை பெற மன்ற தீர்மானத்துடன் அரசின் ஆணை பெற வேண்டியுள்ளது.

எனவே, 31.12.2006 அன்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்ற டாக்டர்.கு.சண்முகம், என்பவரை வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வுபெற அனுமதி வழங்கியதற்கும், வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி துறைத் தேர்வான செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து அரசாணை பெற மன்றத்தின் அனுமதி நியமனக்குழுவின் மூலம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.1வ.து.ந.க. எண்.அ.2/ 5606/2006
ஆணையாளர் அவர்களின் 14.09.2007 நாளிட்ட குறிப்பு

27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.472/2007 பொருள் எண்.11

பணியமைப்பு – தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சிபெறுவதிலிருந்து விலக்களித்தல்

திரு.எம்.பி.ஹரிபாபு, வயது முதிர்வு ஓய்வு பெற்ற இளநிலை பொறியாளர், மண்டலம்–1, அவர்கள் சென்னை மாநகராட்சியில் முதன்முதலில் ஓவர்சியராக 11.02.1975 அன்று பணியில் சேர்ந்து பின்னர் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து 31.12.2006 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் தொடர்ந்து 31 ஆண்டுகள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

தனியரது தாய் மொழி தெலுங்கு என்பதால், 05.03.07 நாளிட்ட துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை அவர்களது கடிதத்தில் தனியர் தமிழில் தேர்ச்சி பெறாதற்கு அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 04.07.2007 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய சார் செயலாளர் அவர்கள் கடிதத்தில் தனியர் ஐந்து முறை தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறவில்லை என உறுதி செய்துள்ளார்.

எனவே தனியர் தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெறாமைக்கு சிறப்பினமாக தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெற அரசிற்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் பெற நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>சு.து.ந.க.எண்.சி1/3093/2007</u>

<u>ஆணையாளர் அவர்களின் 22.08.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.473/2007 பொருள் எண்.12

<u>பணியமைப்பு</u>

05.06.2006 நாளிட்ட அரசு கடிதத்தில் சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் மேற்படிப்பு பட்டம் பெற்று பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்க கோரும் கோரிக்கை மனுவினை தக்க நடவடிக்கைக்காக அனுப்பியுள்ளது.

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் பணிபுரியும் மேற்படிப்பு பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்கள் கோரிக்கையானது, அரசாணை எண்.770, சுகாதாரம் நாள்.19.03.1963ன்படி மேற்படிப்பு பட்டம் பெற்ற அரசு மருத்துவ அலுவலர்கள் உதவி அறுவை மருத்துவர் நிலையில் உள்ளவர்களுக்கு இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்குவது போல் தங்களுக்கும் இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்குமாறு கோரியுள்ளனர்.

மன்றத் தீர்மான எண்.624/98, நாள்.27.07.1998ல் மேற்படி அரசாணை எண்.770, சுகாதாரம் நாள்.19.03.1963ஐ சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மேற்படிப்பு பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்களுக்கு விரிவுப்படுத்தி, மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்க தீர்மானிக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி உள்ளாட்சி நிதி தணிக்கையினரால் தெரிவிக்கப்பட்ட கருத்தின் அடிப்படையில் மேற்படி மன்றத் தீர்மானம் குறித்து அரசாணை பெற அரசுக்கு செயற் குறிப்பு அனுப்பப்பட்டது.

அரசு கடித எண்.(ப)51, (மாந3), ந.நி.ம.கு.வ.து.நாள்.18.02.2002ல் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் / உதவிஅறுவை மருத்துவர்கள் ஆகியோருக்கு முன் ஊதிய உயர்வு வழங்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மன்றத் தீர்மான எண்.199/02, நாள்.21.05.2002ல் இவ்வரசு கடிதம் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டு மேற்படிப்பு பட்டம் பெற்று இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருப்பின் அதனை உரியவரிடமிருந்து பிடித்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

தற்போது, சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் மேற்படிப்பு பட்டம் பெற்று பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்க கோரும் கோரிக்கை மனுவினை தக்க நடவடிக்கை மேற்கொள்ள அரசு கோரியுள்ளதை கருத்தில் கொண்டும், அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் பணி மற்றும் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மேற்படிப்பு பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்களின் பணியோடு ஒப்பிட்டு பரிசீலிக்கப்பட்டது.

மேலும், சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் பொருளாதார மற்றும் நலிவுற்ற மக்களுக்கு பயன் தரும் வகையில் அறுவை சிகிச்சை, குழந்தைகளுக்கான சிகிச்சை, மகப்பேறு மருத்துவ சிகிச்சை, அம்மை, காசநோய், தொற்றுநோய், கண் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் பள்ளிகளில் சிறப்பு மருத்துவ முகாம்கள் மற்றும் இயற்கை சீற்றத்தின் போது சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைத்து சீரிய முறையில் மருத்துவ பணிகள் சென்னை மாநகராட்சி மருத்துவ அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் மேற்படிப்பு பட்டம் பெற்று பணிபுரியும் மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை மொத்தம் 9 ஆகும். இவர்களுக்கு இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்கினால் ஆண்டுக்கு சுமார். ரூ.92,000/–மட்டுமே செலவாகும். மேலும், இவர்களுக்கு வேறு பதவி உயர்வு வழங்க இயலாத நிலையில் இவர்கள் வெவ்வேறு மேற்படிப்பு பட்டம் பெற்றுள்ளதால் இவர்களது பணியினை மேலும் ஊக்குவிக்க இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்க பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் பணி மற்றும் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மேற்படிப்பு பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்களின் பணி, காலமுறை ஊதிய விகிதம் ஒரே மாதிரியாக இருப்பதால், அரசாணை எண்.770, சுகாதாரம், நாள்.19.03.1963ஐ மேற்படிப்பு பட்டம் பெற்ற அரசு மருத்துவர்களுக்கு இரண்டு முன் ஊதிய உயர்வு அளித்தது போல், சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மேற்படிப்பு பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்களுக்கு விரிவுப்படுத்திட அரசினை மீண்டும் வலியுறுத்தி அரசாணை பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/06791/2006**

**ஆணையாளர் அவர்களின் 21.08.2007 நாளிட்ட குறிப்பு**

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.474/2007 பொருள் எண்.13

**பணியமைப்பு– மேற்படிப்பு பயில அனுமதி அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி**

டாக்டர்.அ.பிரபாவதி, உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–4 அவர்கள் காரைக்குடி அழகப்பா பல்கலை கழகத்தில் 2006–2007ம் ஆண்டு முதல் M.B.A Hospital Management படிப்பினை தபால் வழி மூலமாக பயிலுவதற்கு விண்ணப்பிக்க அனுமதி கோரி கடிதம் சமர்பித்தார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 19.04.1995 முதல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டார். தனியரது பணி மருத்துவ அலுவலர் பதவியில் 19.04.1995 முதல் பணி வரன் முறைப்படுத்தப்பட்டு 19.04.1997 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து டாக்டர்.அ.பிரபாவதி, மருத்துவ அலுவலர் அவர்கள் 09.07.1999 முதல் உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு பெற்றுள்ளார். தனியருக்கு உதவி சுகாதார அலுவலர் பதவியில் 09.07.1999 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் உதவி சுகாதார அலுவலர் பதவியானது வகுப்பு இரண்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, டாக்டர்.அ.பிரபாவதி, உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–4 அவர்கள் காரைக்குடி அழகப்பா பல்கலை கழகத்தின் M.B.A Hospital Management படிப்பினை தபால் வழி மூலம் பயிலுவதற்கு மன்றத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் போதிய கால அவகாசம் இல்லாததால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் கீழ் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் தனியர் அழகப்பா பல்கலை கழகத்தில் தபால் வழி கல்வி பயில அனுமதியளித்து ஆணை வழங்கப்பட்டது.

1) தனியர் தபால் வழி கல்வி பயிலும் காலத்தில் சென்னை மாநகராட்சி அன்றாட அலுவலக பணிகளுக்கு குந்தகம் ஏதும் ஏற்படும் வகையில் நடந்துக்கொள்ளக்கூடாது.
2) தற்போது அளிக்கும் அனுமதி 2006–2007 மற்றும் 2007 – 2008 ஆம் கல்வியாண்டிற்கு மட்டுமே பொருந்தும்.
3) கல்வி பயிலும் காலத்தில் பணியிட மாற்றம் ஏதும் கோரக்கூடாது.
4) பயின்ற இப்படிப்பிற்காக அலுவலகத்தில் எப்பணியிடத்திலும் முன்னுரிமை கோரக்கூடாது.
5) மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் செயலில் ஈடுபட்டால் தங்களுக்கு வழங்கப்படும் அனுமதி ரத்து செய்யப்பட்டு தங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்படும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தனியர் காரைக்குடி அழகப்பா பல்கலை கழகத்தில் 2006–2007ம் ஆண்டு முதல் M.B.A Hospital Management படிப்பினை தபால் வழி மூலம் பயிலுவதற்கு அனுமதி அளித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி1/0585/2007

ஆணையாளர் அவர்களின் 24.08.2007 நாளிட்ட குறிப்பு

27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.475/2007 பொருள் எண்.14

பணியமைப்பு– மேற்படிப்பு பயில அனுமதி அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, தண்டையார் பேட்டை, தொற்றுநோய் மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வரும் டாக்டர் எஸ்.கற்பகம் என்பவர் சென்னை மருத்துவ கல்லூரியில் மருத்துவ மேற்படிப்பு நுழைவுத் தேர்வு எழுத விண்ணபித்தார். அவரது விண்ணப்பம் ஆணையர் அவர்களின் பரிந்துரையுடன் மருத்துவ கல்வி இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து டாக்டர்.எஸ்.கற்பகம், மருத்துவ அலுவலர் என்பவர் சென்னை மருத்துவ கல்லூரியில் 2007–2008ஆம் ஆண்டு முதல் இரண்டாண்டுகள் பொது சுகாதாரத்தில் பட்டய படிப்பு (D.P.H) பயிலுவதற்கான 30.05.2007 நாளிட்ட இட ஒதுக்கீடு ஆணையினை தேர்வாணைக்குழு மருத்துவ கல்வி இயக்கு நரகத்திலிருந்து பெற்று தன்னை 31.05.2007 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்குமாறு 30.05.2007 தேதியிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொண்டார்.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சியில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியரை மேற்படிப்பு பயில விடுவிக்க மன்றத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் போதிய கால அவகாசம் இல்லாததால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் பின் வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் தனியரை சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை சு.க.து.ந.க.எண்.சி1/585/2007 நாள்.31.05.2007ன்படி 31.05.2007 அன்று பிற்பகல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

1) தனியர் மருத்துவ மேற்படிப்பு முடித்து சென்னை மாநகராட்சியில் மீண்டும் பணியில் சேர்ந்து குறைந்தது 15 ஆண்டுகள் அல்லது அவர் வயது முதிர்வு ஓய்வு பெறும் வரை பணிபுரிந்திட வேண்டும்.
2) அரசாணை எண்.31 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 24.02.2005ன் படி தனியர் மேற்படிப்பு பயில செல்லும் காலம் ஊதியம் தவிர்த்து தகுதிகாண் பருவம், ஊதிய உயர்வு, ஓய்வூதியம் போன்றவைகளுக்கு மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.
3) தனியர் மேற்படிப்பு பயிலுவதற்கு ஆகும் எந்த செலவினங்களையும் மாநகராட்சி ஏற்காது.
4) தனியர் மேற்படிப்பு பயிலும் காலத்தில் பணி துறப்பு கோரி விண்ணப்பிக்கக் கூடாது. மீறி விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
5) தனியர் இப்படிப்பை காரணம் காட்டி பதவி உயர்வு ஏதும் கோரக்கூடாது.
6) தனியர் மேற்படிப்பை முடித்து தேர்வு பெறாவிட்டால் ஊதிய உயர்வு நிறுத்தப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை சென்னை மருத்துவ கல்லூரியில் 2007–2008ம் ஆண்டு முதல் இரண்டாண்டுகள் பொது சுகாதாரத்தில் பட்டய படிப்பு (D.P.H) பயிலுவதற்கும், சென்னை மாநகராட்சி பணியிலிருந்து 31.05.2007 அன்று பிற்பகல் விடுவித்ததற்கும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/0608/2007**
**ஆணையாளர் அவர்களின் 24.08.2007 நாளிட்ட குறிப்பு**

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.476/2007 பொருள் எண்.15

**பணியமைப்பு– மேற்படிப்பு பயில அனுமதி அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–7ல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வரும் டாக்டர்.எஸ்.சித்ரா, என்பவர் சென்னை மருத்துவ கல்லூரியில் 2007–2008ம் ஆண்டில் மருத்துவ மேற்படிப்பு பயில நுழைவுத் தேர்வு எழுத விண்ணப்பித்து, அவரது விண்ணப்பம் ஆணையரது பரிந்துரையுடன் இயக்குநர் மருத்துவ கல்வி இயக்குநரகம் சென்னை 10ற்கு அனுப்பப்பட்டது.

இதனை தொடர்ந்து டாக்டர்.எஸ்.சித்ரா, மருத்துவ அலுவலர் என்பவருக்கு சென்னை மருத்துவ கல்லூரியில் மூன்றாண்டுகள் மருத்துவ மேற்படிப்பு (M.D.Micro Biology) பயிலுவதற்கு 07.04.2007 நாளிட்ட இட ஒதுக்கீடு ஆணையினை பெற்று தன்னை பணியிலிருந்து விடுவிக்குமாறு 15.05.2007 நாளிட்ட கடிதத்தினை சமர்ப்பித்திருந்தார்.

மருத்துவ அலுவலர் பதவியானது சென்னை மாநகராட்சியில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே தனியரை மேல்படிப்பு பயில மன்றத்தின் முன் அனுமதி பெற்று விடுவிக்கப்படவேண்டும். எனினும் போதிய கால அவகாசம் இன்மையால் தனியரை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் ஆணையரது செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/0608/2007 நாள்.18.05.2007ன் படி 18.05.2007 அன்று முற்பகல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

1) தனியர் மருத்துவ மேற்படிப்பு முடித்து சென்னை மாநகராட்சியில் மீண்டும் பணியில் சேர்ந்து குறைந்தது 15 ஆண்டுகள் அல்லது அவர் வயது முதிர்வு ஓய்வு பெறும் வரை பணிபுரிந்திட வேண்டும்.
2) அரசாணை எண்.31 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.02.2005ன்படி தனியர் மேற்படிப்பு பயில செல்லும் காலம் ஊதியம் தவிர்த்து தகுதிகாண் பருவம், ஊதிய உயர்வு, ஓய்வூதியம் போன்றவைகளுக்கு மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.
3) தனியர் மேற்படிப்பு பயிலுவதற்கு ஆகும் எந்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
4) தனியர் மேற்படிப்பு பயிலும் காலத்தில் பணி துறப்பு கோரி விண்ணப்பிக்கக்கூடாது. மீறி விண்ணப்பித்தால் எக்காரணத்தைக் கொண்டும் அக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5) தனியர் இப்படிப்பை காரணம் காட்டி பதவி உயர்வு ஏதும் கோரக்கூடாது.

எனவே,மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை சென்னை மருத்துவ கல்லூரியில் 2007–2008ம் ஆண்டு முதல் மூன்றாண்டுகள் மருத்துவ மேற்படிப்பு (M.D.Micro Biology)படிப்பதற்கும், தனியரை 18.05.2007 முற்பகல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து விடுவித்ததற்கும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி1/7532/2007

ஆணையாளர் அவர்களின் 27.08.2007 நாளிட்ட குறிப்பு

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.477/2007 பொருள் எண்.16

**பணியமைப்பு– மருத்துவ அலுவலர் பணி நியமனம் பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி சுகாதார துறையில் மருத்துவ அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களின் ண்ணிக்கை 31 ஆகும். மருத்து அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவி சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85 (3) (பி)ன் படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன் படி மருத்துவ அலுவலர் (அலோபதி) பதவியினை நேரிடை நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000–275–13,500 கல்வி தகுதி அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தினால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

அரசாணை எண்.57 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.02.2007ன்படி 2006–2007ம் ஆண்டிற்கான 50 விழுக்காடு காலிப்பணியிடங்களை நிரப்ப அரசாணை எண்.85 பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.06.05.2000ல் குறிப்பிட்டுள்ள வழி முறைகளின்படி இன சுழச்சி முறை பின்பற்றப்பட்டு 15 காலிப்பணியிடங்களை நிரப்ப மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு இன சுழற்சி முறை பின்பற்றப்பட்டு அரசாணை எண்.65 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (N2) துறை நாள்.30.03.2007ல் தெரிவித்துள்ளபடி 1 :1 விகிதாசார அடிப்படையில் 15 காலிப்பணியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| S.No | Registration No | Name and Address | Date of Birth | Community |
|---|---|---|---|---|
| 01 | Ex-Servicemen EXIPkF TN-18/MS 1427A/15800 2007 F 14907 SF 16.02.2007 | L.K.Vennila 36, Thiruveethi Amman Koil Street, 2nd Lane Aminjikarai, Chennai-29 | 03.11.1975 | Scheduled Caste Priority |
| 02 | 1996 F 06808 SF 18.09.1996 | S.Geetha, No.14, Ist Street A.V.M. Nagar, Virugambakkam, Chennai-92 | 28.06.1973 | Most Backward Class Non-Priority |
| 03 | 1990 F 01287 SF 28.02.1990 | R.Malar, P.No.302 New No.8, 16th East Street Kamaraj Nagar, Thivanmiyur, Chennai-41 | 20.10.1964 | Backward Class Non-Priority |
| 04 | 1990 F 03234 SF 18.06.1990 | S.Kannamani, No.1/3 Sai Darbar, No.45 2nd Main Road, R.A.Puram, Chennai-28 | 05.06.1964 | Backward Class General Turn Non-Priority |

| S.No | Registration No | Name and Address | Date of Birth | Community |
|---|---|---|---|---|
| 05 | 1993 F 00951 SF 19.02.1993 | Sumathi,D/o Krishnan, 1055, Ganesh Priya 16th Central Cross Street, M.K.B.Nagar, Chennai-39 | 03.10.1969 | Scheduled Caste General Turn Non-Priority |
| 06 | 1985 M 20550 SF 30.12.1998 | C.Kaliyappa, Y1/11.S.A.F Games Village Koyambedu, Chennai-107 | 13.01.1960 | Scheduled Caste Non-Priority |
| 07 | 1988 M 01652 SF 10.03.1988 | V.Ragunathan,S/o C.Veera Raghavan, 8, 2nd Street, Mangalapuram Chetpet,Chennai-31 | 07.01.1964 | Scheduled Caste Non-Priority |
| 08 | 1987 F 07050 SF 08.08.1997 | M.Jayanthi, 111 PatelRoad, Perambur, Chennai-11 | 13.11.1972 | Most Backward Class Non-Priority |
| 09 | 1998 F 01166 SF 02.03.1988 | K.Priyadharshini, 5 Arulappan Street, Mandaveli pakkam, Chennai-28 | 20.10.1974 | Most Backward Class Non-Priority |
| 10 | 1990 M 00906 SF 27.01.1990 | P.Jagadeesan, 33 Cooks Road, Otteri, Chennai-12 | 23.09.1966 | Backward Class Non-Priority |
| 11 | 1993 F 06602 SF 13.07.1993 | A.Fathima, No.1, 2nd Street Poonagipuram Chennai-34 | 16.12.1968 | Backward Class Non-Priority |
| 12 | 1996 M 02172 SF 25.03.1996 | G.Balachandran, C/o Murugesan 108 C.Vellalar Street, Kodambakkam Chennai-24 | 04.12.1972 | Backward Class Non-Priority |
| 13 | Ex-Servicemen EXIPkF 2005 M 01015 SF 25.01.2005 | John Samuel, 43, Karaneeswaran Koil Street, No.A6 Mylapore, Chennai-4 | 16.07.1978 | General Turn Non-Priority |
| 14 | PCR/DEPMT/and Acqun 2002 M 13106 30.07.2002 | G.M.Nanda Kumar, R.Labour Officers Quarters, P Block 6th Avenue Anna Nagar West Chennai-40 | 16.07.1978 | Most Backward Class DNT General Turn Priority |
| 15 | 1993 M 01525 SF 23.02.1993 | D.Baskaran, S/o D.Dhanraj, 54, Thoppai Street, Royapuram, Chennai-13 | 23.05.1962 | Scheduled Caste General Turn Non-Priority |

**சு.து.ந.க.எண்.சி1/7532/2007**

மேற்படி பட்டியலில் உள்ள நபர்களை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 04.06.2007 அன்று ஆஜராக அழைப்பு விடப்பட்டது. அவ்வாறு நடைப்பெற்ற சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வரிசை எண். 1, 5,7,8,11,12 ஆகிய 6 நபர்கள் மட்டுமே சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரானார்கள்.

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மருந்தகங்களுக்கு போதிய மருத்துவ அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் அன்றாட சுகாதார பணிகளை மேற்கொள்ள சிரமம் ஏற்படுகிறது.

நிர்வாக நலன் கருதி அவசர அவசியம் மற்றும் பொது மக்களுக்கு அன்றாட சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான 6 நபர்களை உடனடியாக பணி நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜராகாத மற்ற 9 நபர்கள் குறித்து வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு தனியே கடிதம் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான 6 நபர்களின் கல்வித் தகுதி வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி பூர்த்தி செய்துள்ளதாலும் அவர்களின் கடந்த கால மருத்துவ சேவையை கருத்தில் கொண்டும் இவர்களுக்கு பணி நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் பணி விதிகளின் படி மருத்துவ அலுவலர் (அலோபதி) பதவிக்கான வயது வரம்பு 35 என்று நிர்ணயிக்கப்பட்ட போதிலும் அரசாணை எண். 98, பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள். 17.07.2006ல் அரசு பணிகளுக்கான வயது வரம்பினை கடந்தவர்களுக்கு மேலும் 5 ஆண்டுகளுக்கு வயது தளர்வாணை வழங்கியுள்ளதாலும் Tamil Nadu State & Subordinate Service Rules 12 D (ii) ன் படி திருவாளர்கள் டாக்டர். V. ரகுநாதன், டாக்டர். A. பாத்திமா, மற்றும் டாக்டர். சுமதி ஆகியோர் 35 வயதினை கடந்துள்ள போதிலும் இவர்களுக்கு வயது வரம்பு பொருந்தாது.

மேலும் டாக்டர். L.K. வெண்ணிலா என்ற நபர் தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெறாததால் இவருக்கு பணிநியமனம் வழங்கும் பொருட்டு இவரது தகுதிகாண் பருவக் காலத்திற்குள் தமிழ் நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற அறிவுறுத்தலாம்.

எனவே, தற்போது வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பதிவு மூப்பு மற்றும் இன சுழற்சி அடிப்படையில் பெறப்பட்ட பட்டியலில் பின்வரும் 6 நபர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு சுகாதாரத்துறையில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்களில் கீழ்காணும் 6 நபர்களை தற்காலிகமாக ரூ.8000–275–13,500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் மருத்துவ அலுவலர்களாக பணி நியமனம் செய்யவும், சென்னை மாநகராட்சி பொது சுகாதார மற்றும் மருத்துவ பணி விதிகளின் படி இவர்கள் தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு தேர்வாணயத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் தற்போது மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள டாக்டர் L. K. வெண்ணிலா என்பவர் தமிழ்மொழியை பாடமாக கொண்டு தேர்ச்சி பெறாததால் இவரது தகுதி காண் பருவ காலத்திற்குள் தமிழ் நாடு அரசு தேர்வாணயத்தால் நடத்தப்படும் தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தணையின் அடிப்படையில் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு நியமனக்குழு தீர்மான எண்.253/07, நாள்.09.07.2007ன்படி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/7532/06, 13.07.2007 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி பணி நியமனம் செய்து உத்தரவு வழங்கப்பட்டது.

| Sl,No, | Registration No. | Name and Address | Date of Birth | Community | Communal No. |
|---|---|---|---|---|---|
| 1. | 1988 M 1652 S.F. 10.03.88 | V. Ragunathan , S/o. C. Veeera Raghavan, 8, 2nd street, Mangalapuram Chetpet, Chennai – 31 | 7.1.1964 43 Years | Scheduled Casts Non-Priority | 2 |

**சு.து.ந.க.எண்.சி1/7532/2007**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | 1993 Fo6602<br>SF 13.07.1993 | A.Fathima,<br>No.1, 2nd street,<br>Poonagipuram,<br>Chennai - 34 | 16.12.1968<br>38 Years | Backward Class Non-Priority<br>(W) | 4 |
| 3. | 1993 F00951<br>SF 19.02.1993 | Sumathi.<br>D/O Krishnan, 1055 Ganesh Priya 16th Central cross street,<br>M.K.B. Nagar,<br>Ch.-600 039 | 3.10.1969<br>37 Years | Scheduled Caste General Turn<br>Non - Priority<br>(W) | 5 |
| 4. | Ex- Service men- EXIPkF Tn-18 / MS 1427 A /15800 2007F 14907 SF 16.02.2007 | L.K. Vennila 36 Thiruveethi Amman Koil street, 2nd Lane Aminjikarai,<br>Chennai - 600 029 | 3.11.1975<br>32 Yairs | Scheduled Caste Priority<br>(W) | 6 |
| 5. | 1987 Fo7050<br>SF 8.8.1997 | M. Jayanthi<br>111, Patel Road,<br>Perambur ,<br>Chennai -600 011 | 13.11.1972<br>34 Years | Most Backward class Non-Priority (W) | 7 |
| 6. | 1996 MO2172 SF<br>25.03.1996 | G. Balachandran,<br>C/o Murugesan 108<br>C. Vellala Street,<br>Kodambakkam<br>Chennai -600 024 | 4.12. 1972<br>32 Years | Backward Class<br>Non - Priority | 10 |

சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான மேற்கண்ட 6 நபர்களில் இனம் எண்.3 மற்றும் 6ல் கண்டுள்ள நபர்கள் தொலைபேசி மூலம் பணியில் சேர விருப்பமில்லை என தெரிவித்து விட்டனர் மற்ற 4 நபர்களான டாக்டர்.V.ரகுநாதன், டாக்டர்.N.ஜெயந்தி, டாக்டர்.A.பாத்திமா, ஆகியோர் 14.07.2007 அன்றும் டாக்டர் L. K. வெண்ணிலா என்பவர் 17.07.2007 அன்றும் மருத்துவ அலுவலர்களாக தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையில் பணியில் சேர்ந்துள்ளனர்.

மேற்படி 4 மருத்துவர்களை மருத்துவ அலுவலர் பதவிக்கான காலமுறை ஊதிய விகிதமான ரூ.8000–275–13,500ல் மற்றும் இதர படிகளுடன் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிமாக பணி நியமனம் செய்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், மேற்படி 4 நபர்களின் பணி நியமனம் குறித்து அரசின் உறுதியாக்கம் பெற்றிட அரசிற்கு செயற் குறிப்பு அனுப்பிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ1/20151/2007
ஆணையாளர் அவர்களின் 17.09.2007 நாளிட்ட குறிப்பு

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.478/2007 பொருள் எண்.17

**செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சியில் செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான நியமன அதிகாரம் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதி ஆகும். மேற்படி பதவிக்கு 01.04.2007ஐ மைய நாளாகக் கொண்டு 2007–2008ஆம் ஆண்டுக்கான தெரிவுப் பட்டியல் தயாரிக்கப்படவேண்டியுள்ளது. மேற்படி பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| Executive Engineer | By promotion | 1. (a) Must possess the B.E. degree (Civil or Mechanical) of any University or Institution recognised by the University Grants Commission for purposes of its grant; or<br><br>(b) Must possess the Diploma in Civil or Mechanical Engineering of the State Board of Technical Education or any other qualification considered equivalent thereto:<br><br>Provided that a person possessing the Diploma in Engineering of the State Board of Technical Education and Training should have shown exceptional merit as Assistant Executive Engineer; and<br><br>2. Must have put in a service of not less than five years as Assistant executive Engineer in Corporation |

மேற்படி செயற்பொறியாளர் பதவிக்கு ஊட்டப்பதவியான உதவி செயற்பொறியாளர் பதவியில் அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.03.2001ன்படி கீழ்நிலை பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம் உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற உதவி செயற்பொறியாளர்களின் பணிமூப்பு நிலை இறுதி செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளதால், அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 114 உதவி செயற்பொறியாளர்களுக்கு அடுத்து உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளவர்களுக்கு அரசின் உறுதியாக்கம் பெறப்படவில்லை. உதவி செயற்பொறியாளர் பதவியில் அரசின் உறுதியாக்கம் பெறுவதை எதிர்நோக்கி, பணிமூப்பு அடிப்படையில் உதவி செயற்பொறியாளர்களாக பணிபுரிந்துவருவோர்களின் பெயர்களையும் சேர்த்து பரிசீலித்ததில், செயற்பொறியாளர் பதவிக்கான பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வரிசை எண். | பெயர் திருவாளர்கள் |
|---|---|
| 1 | என். அரசு |
| 2 | என். கிருஷ்ணமூர்த்தி |
| 3 | எஸ்.கல்யாணசுந்தரம் |
| 4 | ஆர்.அன்பழகன் |
| 5 | எம்.கே. ரகு |

<u>பொ.து.ந.க.எண்.ஈ1/20151/2007</u>

மேற்படி பட்டியலில் வரிசை எண்.3ல் உள்ள திரு.கல்யாணசுந்தரம் என்பவர் மீது, மண்டலம்-9ல் சென்னை மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் கட்டுமானப்பணியினை உரிய காலத்தில் தடுக்கத் தவறியதற்காக, சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஒழுங்கு நடவடிக்கை விதி 1970, பிரிவு எண்.10(பி)ன் கீழ் கடுங்குற்றச்சாட்டின் கீழ் குற்றங்கள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட நிகழ்வில் தனியரின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால் ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டது.

(அ) எனவே, கீழ்கண்ட ஐந்து உதவி செயற்பொறியாளர்களைக் கொண்ட செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கவும்,

| வரிசை எண். | பெயர் திருவாளர்கள் |
|---|---|
| 1 | என். அரசு |
| 2 | என். கிருஷ்ணமூர்த்தி |
| 3 | எஸ்.கல்யாணசுந்தரம் |
| 4 | ஆர்.அன்பழகன் |
| 5 | எம்.கே. ரகு |

ஆ) செயற்பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியல் காலாவதியாகும் காலம் வரை (The Panel shall be valid for a period of one year from the date of approval by the competent authority), வயது முதிர்வு மற்றும் பதவி உயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் செயற்பொறியாளர் பதவியில் ஏற்படவுள்ள ஐந்து காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியலில் உள்ள தகுதியானவர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக ரூ.10000-325-15200 என்ற காலமுறை ஊதிய விகிதம் நிர்ணயம் செய்து, தற்காலிகமாக செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கவும்,

இ) உதவி செயற்பொறியாளர் பதவியில் மேற்படி நபர்களுக்கு பணி விதிகளின்படி, தகுதிகாண் பருவம் முடித்தவர்களாக அறிவிக்கை செய்ய நடவடிக்கை மேற்கொண்டு தக்க ஆணைகள் வெளியிட ஆணையருக்கு அனுமதியும்,

ஈ) உதவி செயற்பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றம் வழங்கவிருக்கும் தீர்ப்புக்குட்பட்டும், மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்ட நிகழ்வில் அரசால் பிறப்பிக்கப்படும் ஆணைக்குட்பட்டும் செயற்பொறியாளர் பதவியில் பணிஉறுதியாக்கம் செய்ய அரசுக்கு தக்க பிரேரணையினை பின்னர் அனுப்பவும் நியமனக் குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**<u>ப.து.ந.க.எண்.டி11/265/99</u>**

**<u>ஆணையாளரின் 31.07.2007 நாளிட்ட குறிப்பு.</u>**

**<u>27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண்.479/2007 பொருள் எண்: 18

**<u>கட்டிட அனுமதி</u>**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் தரை தளம் மற்றும் 4 அடுக்கு மாடி – இரண்டு பிளாக்குகள் (மொத்தம் 40 குடியிருப்புகள்) கொண்ட கட்டிடம் கட்ட சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் திட்ட அனுமதி அளித்து கட்டிட அனுமதியினை சென்னை மாநகராட்சி வழங்கிட கேட்டுக் கொண்டுள்ளது.

இதன் பொருட்டு தெரிவிப்பது என்னவென்றால், இக்கோப்பு கூர்ந்தாய்வு செய்யப்பட்டு 31.07.2007 அன்று கட்டிட அனுமதிக்காக தலைமை பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கட்டிட உரிமக்கட்டணம், ரூ.5,31,000/– கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.495/– மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் நலநிதி ரூ.60,480/–ம் செலுத்தக்கோரி வீட்டு வசதி வாரியத்திற்கு அறிவுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதில் கட்டுமான தொழிலாளர் நலநிதி ரூ.60,480/–யை வீட்டு வசதி வாரியமே நேரடியாக செலுத்தியுள்ளதாகவும், அதனை தவிர்த்து புதிய அறிவுறுத்தல் கடிதம் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனிடையில், நகரமைப்புப் பிரிவில் கட்டிட உரிமக்கட்டணம் மற்றும் கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் இதரக் கட்டணங்கள் மன்றத் தீர்மானம் பெற்று உயர்த்தப்பட்டது.

இவ்வாறு உயர்த்தப்பட்ட கட்டண விகிதப்படியும், கட்டுமான தொழிலாளர் நலவாரிய நலநிதியை தவித்தும் மீண்டும் தலைமை பொறியாளரின் ஒப்புதல் பெறப்பட்டு, அதன்படி கட்டிட உரிமக் கட்டணம் ரூ.6,28,500/–ம் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.545/–ம் செலுத்தக்கோரி 06.09.2002 நாளிட்ட கடிதம் வழங்கப்பட்டது.

வீட்டு வசதி வாரிய 13.11.2002 நாளிட்ட கடிதத்தில், ஏற்கனவே 31.07.2001 நாளிட்ட அறிவுறுத்தல் கடிதத்தில் குறிப்பிட்டபடி கட்டிட உரிமக்கட்டணம் ரூ.5,31,000/–ம், கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.495/–ம் செலுத்த அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், அதனை ஏற்றுக்கொள்ள இயலாதெனவும் 06.09.2002 நாளிட்ட அறிவுறுத்தல் கடிதத்தில் தெரிவித்தபடி கட்டணம் ரூ.6,29,045/– செலுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதனை மறுபரிசீலனை செய்யக்கோரியும், பழைய கட்டண விகிதத்திலேயே கட்டணத்தை செலுத்த அனுமதிக்குமாறும் மீண்டும், மீண்டும் கடிதம் வீட்டு வசதி வாரியத்தால் அனுப்பப்படுகிறது.

இதனிடையே மீண்டும் 01.10.2003 முதல் கட்டிட உரிமக்கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி கணக்கிட்டால் கட்டிட உரிமக்கட்டணம் ரூ.6,74,900/–ம், கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.600/– ஆக மொத்தம் ரூ.6,75,500/– செலுத்தப்படவேண்டும்.

எனினும், மேற்கண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டதாலும், வீட்டு வசதி வாரியம் சிரமமான நிலையில் உள்ளதாலும், 31.07.2001 நாளிட்ட அறிவுறுத்தல் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறும், இக்கோப்பின் மீது நிதி ஆலோசகர் அவர்களின் 30.05.2005 நாளிட்ட குறிப்பின் படியும் கட்டட உரிமக்கட்டணம் ரூ.5,31,000/–ம், கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.495/–ம் செலுத்த அனுமதித்து, மேற்கண்ட கட்டணங்கள் செலுத்தியவுடன் கட்டட அனுமதி வழங்கிட மன்றத்தின் அனுமதி நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக வேண்டப்படுகிறது.

> "நீண்ட விவாதத்திற்குப் பின்னர் கட்டிட உரிமக் கட்டணம் ரூ.6,74,900/–ம் கூர்ந்தாய்வுக் கட்டணம் ரூ.600/–ம் ஆக மொத்தம் ரூ.6,75,500/– செலுத்தப்பட வேண்டும் என்ற திருத்தத்துடன், 19.09.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.23/2007, நாள்: 19.9.2007-ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/345/2007**
**ஆணையரின் 24.09.2007 நாளிட்ட குறிப்பு**

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.480/2007 பொருள் எண். 19

**மெரீனா கடற்கரையின் மணற்பரப்பை இயந்திரம் கொண்டும் சுத்தம் செய்யும் பணிக்காக 10.08.2007 அன்று மொத்தம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவைகளை சமர்ப்பித்தவர்களின் விவரம் கீழ் வருமாறு**

1. திருவாளர்கள் பாலா இண்டஸ்ட்ரீஸ்
2. திருவாளர்கள் நீல் மெட்டல் ப்ராடக்ட்ஸ்

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, இந்த ஒப்பந்தப்புள்ளி இரட்டை உறை முறையினை பின்பற்றியதாகும்

இவர்களில் திருவாளர்கள் நீல் மெட்டல் ப்ராடக்ட்ஸ் அவர்கள் தங்கள் பிரதான உறையின் உள்ளே வைத்துள்ள இரண்டு உறைகளையும் மூடப்படாத நிலையில் சமர்ப்பித்துள்ளனர் என்பதால் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி முதலிலேயே நிராகரிக்கப்பட்டது.

இந்த பணி தற்போது சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒப்பந்ததாரரின் மூலம் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த பணி 21.9.2007 உடன் முடிவடைந்து விட்டது. இருப்பினும் சென்னை மாநகராட்சி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் இந்த பணியினை 30.09.2007 வரை செயலாக்க சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் தங்களின் 18.09.2007 நாளிட்ட கடிதத்தில் ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.

இந்த பணிக்காக மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைப்படி ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒவ்வோரு ஆண்டும் இந்த பணியினை செயலாக்க அவர்கள் கோரும் தொகையினை கோர வேண்டும்.

திருவாளர்கள் பாலா இண்டஸ்ட்ரீஸ்அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு இந்த பணியினை செயலாக்க கோரியுள்ள தொகை(வரிகள் உட்பட) கீழ்வருமாறு

| | |
|---|---|
| முதல் ஆண்டிற்கு | ரூ.4,56,000/–/ஒரு மாதத்திற்கு |
| இரண்டாம் ஆண்டிற்கு | ரூ.4,87,000/–/ஒரு மாதத்திற்கு |
| மூன்றாம் ஆண்டிற்கு | ரூ.5,17,000/–/ஒரு மாதத்திற்கு |

(மூன்று ஆண்டுகளுக்கு மொத்தம்

ரூ.54,72,000 + 58,44,000 + 62,04,000 =1,75,20,000/–)

இந்த விலைவிகிதத்தை குறைக்க அவர்கள் 13.08.2007 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இதற்கு அவர்கள் தங்களின் 25.08.2007 நாளிட்ட கடிதத்தில் தங்களின் விலைவிகிதத்தை கீழ்வருமாறு குறைத்து அளித்துள்ளனர்.

| | |
|---|---|
| முதல் ஆண்டிற்கு | ரூ.4,31,000/–ஒரு மாதத்திற்கு |
| இரண்டாம் ஆண்டிற்கு | ரூ.4,62,000/–ஒரு மாதத்திற்கு |
| மூன்றாம் ஆண்டிற்கு | ரூ.4,92,000/–ஒரு மாதத்திற்கு |

30.09.2007ல் சென்னை பெருநகர குழுமத்தினால் நடைபெறும் இந்த பணிக்கான ஒப்பந்தம் முடிவடையவிருப்பதாலும், இடைவெளியின்றி இந்த பணி தொடர்ச்சியாக நடைபெற வேண்டியிருப்பதாலும், இந்த ஒப்பந்தத்திற்கு, திருவாளர்கள் பாலா இண்டஸ்ட்ரீஸ் அவர்கள் முதலில் இந்தப்பணியினை ஓராண்டிற்கு மேற்கொள்ள தங்களின் 21.09.2007 நாளிட்ட கடிதத்தில் சம்மதித்துள்ளனர். மீண்டும் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தங்களின் முதல் ஆண்டின் விலை விகிதத்தை மட்டும் குறைத்து அளித்துள்ளனர்.

தற்போது அவர்களின் விலை விகிதம் கீழ்வருமாறு

| | |
|---|---|
| முதல் ஆண்டிற்கு | ரூ.4,16,000/–ஒரு மாதத்திற்கு<br>ரூ.49,92,000/– ஒரு ஆண்டிற்கு |
| இரண்டாம் ஆண்டிற்கு | ரூ.4,62,000/–ஒரு மாதத்திற்கு<br>ரூ.55,44,000/– ஒரு ஆண்டிற்கு |
| மூன்றாம் ஆண்டிற்கு | ரூ.4,92,000/–ஒரு மாதத்திற்கு<br>ரூ.59,04,000/– ஒரு ஆண்டிற்கு |
| மொத்தம் 3 ஆண்டுகளுக்கு | ரூ.1,64,40,000/– |

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/345/2007**

எனவே, இந்த ஒப்பந்தப் பணி தொடர்ந்து நடை பெறவேண்டியிருப்பதால், முதல் ஓராண்டிற்கு மட்டும் மாநகராட்சி மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தம் வழங்கலாம்.

இதில் கோரப்பட்ட விலை விகிதம் குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, மற்றொரு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளிதாரரான திருவாளர்கள் நீல் மெட்டல் ப்ராடக்ட்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அவர்கள் தங்களின் ஒப்பந்தப்புள்ளியினை முறைப்படி சமர்ப்பிக்கவில்லை என்ற காரணத்திற்காக பரிசீலனை செய்யப்படாவிடிலும், அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் திருவாளர்கள் பாலா இண்டஸ்ட்ரீஸ் அவர்களின் விலைவிகிதத்தை விட அதிகமாகவே உள்ளது இந்த ஒப்பந்தப்புள்ளிமுறையை போட்டி ஒப்பந்தப்புள்ளி முறையாக்குகிறது(Competitive bidding process)

திருவாளர்கள் நீல் மெட்டல் அவர்களின் விலைவிகிதமும் திருவாளர்கள் பாலா இண்டஸ்ட்ரீஸ் அவர்களின் விலைவிகிதமும் ஒப்புநோக்கலுக்காக கீழே குறிப்பிடப்படுகிறது.

| ஆண்டு | திருவாளர்கள் நீல் மெட்டல் ப்ராடக்ட்ஸ் அவர்கள் கோரியுள்ள விலைவிகிதம், வரிகள் உட்பட, ஒரு மாதத்திற்கு | திருவாளர்கள் பாலா இண்டஸ்ட்ரீஸ் அவர்கள் கோரியுள்ள விலை விகிதம் வரிகள் உட்பட ஒரு மாதத்திற்கு(பேச்சுவார்த்தைக்குப்பிறகு) |
|---|---|---|
| 1ம் ஆண்டு | ரூ7,33,239/– | ரூ.4,16,000/– |
| 2ம் ஆண்டு | ரூ.6,35,402/– | ரூ.4,62,000/– |
| 3ஆண்டு | ரூ.4,68,000/– | ரூ.4,92,000/– |

தற்போது இந்த பணிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தில் ஒரு மாதத்திற்கு வழங்கப்பட்டு வரும் தொகை ரூ.3,06,666/– மற்றும் ரூ.37,903/– சேவைவரி (12.36 சதவிகிதம்) ஆக மொத்தம் ரூ.3,44,569/– ஆகும். இப்போது திருவாளர்கள் பாலா இண்டஸ்ட்ரீஸ் இப்பணிக்காக இறுதி பேச்சு வார்த்தைக்குப் பிறகு கோரப்பட்டுள்ள தொகை ஒரு மாதத்திற்கு வரிகள் உட்பட, ரூ.4,16,000/– ஆகும்.

இது குறித்து இங்கு மேலும் சமர்ப்பிக்கப்படுவதாவது, இந்த பணிக்காக திடக்கழிவு மேலாண்மைத் துறைக்கு வரவு செலவு கணக்கு எண்.185 தனியார் மூலம் துப்புரவு பணியின் கீழ் போதுமான நிதி ஒதுக்கீடு அளிக்க வேண்டும்.

ஏற்கப்படின்,

(1) மெரீனா கடற்கரையின் மணற்பரப்பினை இயந்திரம் கொண்டு சுத்தப்படுத்தும் பணியினை தொடர்ந்து இடைவெளியின்றி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதாலும், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் இப்பணிக்கான ஒப்பந்தத்தை இம்மாத இறுதிவரை தான் மேற்கொள்ள இயலும் என்றும் கடிதம் மூலம் தெரிவித்துள்ளதாலும் அவசரம் கருதி இப்பணியினை நிறைவேற்ற திருவாளர்கள் பாலா இண்டஸ்ட்ரீஸ் அவர்கள் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மேற்சொன்ன விலைவிகிதத்தில் முதல் ஆண்டிற்கு மட்டும் அவர்கள் பேச்சுவார்த்தைக்குப்பின் ரூ.4,16,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்), வரிகள் உட்பட, என ஓராண்டிற்கு ரூ.49,92,000/–(ரூபாய் நான்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றிரண்டாயிரம் மட்டும்)க்கு அளித்துள்ள விலைவிகிதத்தில் மேற்சொன்ன பணியினை செய்ய அவர்களுக்கு பணியாணை வழங்கவும்

(2) இப்பணிக்கு தேவையான நிதியினை திடக்கழிவு மேலாண்மை துறைக்கு 185–தனியார் துப்புரவு பணி என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கவும்

மாமன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(நிதி மற்றும் வரிவிதிப்பு) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.09.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு(வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.155/07, நாள்: 25.09.2007–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18.    மன்றச் செயலாளர்

<u>வி.து.ந.க.எண்.விஜிசி—2 /110/2007.</u>
<u>ஆணையரின் 24—08—2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.481/2007 பொருள் எண்.20

<u>விழிப்பு அலுவலர் அவர்களுக்கு தினசரி, வாராந்திர மற்றும் மாதாந்திர நாளேடுகள் வாங்குவதற்கு சிறப்பு நிகழ்வாக அனுமதிக்க வேண்டுவது</u>

சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலருக்கு பிரதி மாதந்தோறும் தினசரி, வாராந்திர மற்றும் மாதாந்திர நாளேடுகளான 1) இந்தியன் எக்ஸ்பிரஸ் 2) டெக்கான் கிரானிக்கல் 3) தினத்தந்தி 4) தினகரன் 5) தினமலர் 6) மாலைமலர் 7) ஜூனியர் விகடன் 8) நக்கீரன் 9) குமுதம் ரிப்போர்டர் 10) இந்தியா டுடே 11) தி வீக் 12) அவுட்லுக் 13) தமிழன் எக்ஸ்பிரஸ் 14) சென்னை ரியல் ஆகியவைகளை வாங்குவதற்கு 18.4.2007 நாளிட்ட ஆணையில் ஆணையாளர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் மேற்கூறிய தினசரி, வாராந்திர மற்றும் மாதாந்திர நாளேடுகளை விழிப்புக் குழுமத்திற்கென சிறப்பு நிகழ்வாக வாங்குவதற்கு 2007—2008 ஆம் நிதியாண்டில் புத்தகம் மற்றும் நாளேடுகளுக்கான 342 என்ற தலைப்பின் கீழ் ரூ.1000/— மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இத்தொகையினை ரூ.15,000/— மாக கணக்கு தலைப்பு எண்.342ன் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.09.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு(வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.154/07, நாள்: 25.09.2007 ன் படி இப்பொருளில் 2வது பத்தியில் முதல் வரியில் "உள்ள என்பதிலிருந்து 2, 3 வரிகள் மற்றும் 4வது வரியில் தவிர்க்கும் பொருட்டு" என்பது வரை நீக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

ம.அ5.ந.க.எண்.எச்1/1294/07

ஆணையாளர் அவர்களின் 25.09.07 நாளிட்ட குறிப்பு

**27.9.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.482/2007 பொருள் எண்.21

**பணியமைப்பு–பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.கே.ஸ்டாலின், மலேரியா பணியாளர், சுகாதாரத்துறை மண்டலம்–1, என்பவர் 06.04.2005 அன்று காலமானார். அன்னாரின் வாரிசுதாரர்களுக்கு பணிப்பயன்கள் வழங்க தணிக்கை சான்றிதழ் வேண்டப்பட்டதில், உள்ளாட்சி நிதித்தணிக்கை, காலஞ்சென்ற பணியாளர் 26.02.1997 முதல் 15.09.1998 முடிய 18 மாதங்களுக்கு பணிக்கு வராத காலங்களுக்கு அரசின் பின்னேற்பு ஆணை பெறப்பட வேண்டுமென கூறியுள்ளது.

காலஞ்சென்ற திரு.கே.ஸ்டாலின், மலேரியா பணியாளர், மண்டலம்–5ல் பணிபுரியும் காலத்தில் 26.02.1997 முதல் 15.09.1998 முடிய தகவலின்றி பணிக்கு வராத காரணத்தாலும், மற்றும் பணியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதால் சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் துணை விதிகள் 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு, அன்னாரின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணமான நிலையில் இறுதி ஆணையாக இரண்டு ஆண்டுகள் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்கவும் மற்றும் தகவலின்றி பணிக்கு வராத காலத்தை ஊதியமில்லா விடுப்பாகவும் கருத ஆணையிடப்பட்டது.

மேற்படி, மேற்கொண்ட நடவடிக்கைக்கு அரசின் பின்னேற்பு ஆணை பெறப்பட வேண்டுமென தற்பொழுது உள்ளாட்சி நிதித்தணிக்கை கூறியுள்ளதால், மன்றத்தின் ஒப்புதலுடன் அரசின் உரிய பின்னேற்பு ஆணை பெறப்பட வேண்டும்.

எனவே, 06.04.2005 அன்று காலஞ்சென்ற திரு.கே.ஸ்டாலின், மலேரியா பணியாளர், மண்டலம்–1, என்பவர், மண்டலம்–5ல் பணிபுரியும் பொழுது 26.02.1997 முதல் 15.09.1998 வரை ஓராண்டிற்கு மேல் தகவலின்றி பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த அரசின் ஆணை பெற மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

> ‘‘இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதற்கு நியமனக்குழு சுற்றில் அனுமதி அளித்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்